Cr.M.P.No.1570/2025
in CC.No.241 /2022
PW1 – சரண்யா
நாள் 23.01.2026, 01.10 P.M.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** இந்த வழக்கை நான் தான் எழுத்துமூலமாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக காவல்துறையினர் என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் 18.06.2022ம் தேதி சிக்கல் காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுக்கும் போது விசாரித்தார்கள். புகார் கொடுத்த தேதிக்கு பின்னர் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

**2.** நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களைத் தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுவனை நான் தான் நேரில் பார்த்தேன் என்றால் சரிதான். அந்த சிறுவன் நல்ல சுயநினைவில் தான் இருந்தார் என்றால் சரிதான். அந்த சிறுவனிடம் நான் விசாரணை செய்து எழுத்துமூலமாக வாக்குமூலம் ஏதேனும் வாங்கினேனா என்றால் இல்லை. இந்த வழக்கானது குழந்தைகள் நல வாரியம் சம்மந்தப்பட்டது என்பதால் அவர்கள் தான் புகார் கொடுக்க முடியும் என்றால்சரியல்ல.

**3.** மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் முன்பாக அந்த சிறுவன் பற்றி விவரங்கள் ஏதேனும் பதிவு செய்தார்களா என்றால் செய்தார்கள். அந்த சிறுவனை காப்பகத்தில் யார் ஒப்படைத்தார்கள் என்றால் குழந்தைகள் நல வாரியம் மூலமாக ஒப்படைக்க செய்தார்கள். நானோ எங்கள் வருவாய் மேலதிகாரிகளோ பாதிக்கப்பட்ட சிறுவனின் பெற்றோர்களை அழைத்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சிறுவன் 18 வயதிற்கு கீழ் உள்ள நபர் என்பதற்கான சான்று எதுவம் நான் வாங்கினேனா என்றால் இல்லை. வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வாங்கினார்கள்.

**4.** நான் புகார் மனுவிலும், முதல் விசாரணையிலும் கூறியதுபோல் எதிரி

ரூ.50,000/- ஐ பாதிக்கப்பட்ட சிறுவனின் குடும்பத்திற்கு கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் நடந்ததது தொடர்பாக செல்போனில் வீடியோ ஏதாவது எடுத்து மேலதிகாரியிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். மேற்படி வீடியோவை போலீசார் விசாரணயில் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி